

அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி, பெரிய ஆனந்தவாடி கிராமத்தில அமைக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

### எடப்பாடி ஆட்சியில் ஓடிய ‘சுந்தரா டிராவல்ஸ்’ பேருந்துகளுக்கு பதிலாக - தற்போது

# திராவிட மாடல் ஆட்சியில் புதிய பேருந்துகள் இயக்கப்படுகிறது!

## அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பேட்டி!

அரியலூர், ஜுலை 21-

எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியில் ஓடிய சுந்தரா டிராவல்ஸ் பேருந்துகளுக்கு பதிலாக, தற்போது புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது: கூட்டணிக்கு மிகப்பெரிய புதிய கட்சி வரும் என எடப்பாடி பழனிச்சாமி கூறுவதன் மூலம் அ.தி.மு.க.வின் தரத்தை அவரே தாழ்த்திக் கொண்டிருக்கிறார் என அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேட்டியில் தெரிவித்துள்ளார்..

அரியலூர் மாவட்டம் செந்துறை ஒன்றியத்துக்கு உட்பட்ட பல்வேறு ஊராட்சிகளில் 9 கோடியே 11லட்சம் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை போக்குவரத்து மற்றும் மின்சார துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அரசு விரைவு போக்குவரத்து கழகத்தில் டிரைவர், கண்டக்டர்களுக்கான 3200 பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் ஆன்லைனில் பெறப்பட்டு எழுத்துத் தேர்வு இந்த மாதம் நடைபெற உள்ளது. தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு நேர்முக தேர்வு நடைபெறும். அதன் பிறகு அவர்கள் பணியமர்த்தப் படுவார்கள்.

அரசு போக்குவரத்து கழக பேருந்துகளை சுந்தரா டிராவல்ஸ் என எடப்பாடி பழனிச்சாமி விமர்சனம்



குறித்த கேள்விக்கு...

எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்தவர் அவர் முதலமைச்சராக இருந்த போது புதிய பேருந்துகள் வாங்காத காரணத்தினால் தான் பழைய பேருந்துகள் ஓடியது.

தற்போது எடப்பாடி பழனிச்சாமி ஓட்டக்கூடிய சுந்தரா டிராவல்ஸ்க்கு எப்படி அவர் ஓனரோ, அதே போல் ஏற்கனவே ஓடிய சுந்தரா டிராவல்ஸ்க்கும் அவரே ஓனர்.

அந்த சுந்தரா டிராவல்ஸ் பேருந்தை மாற்றுவதற்காகவே முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து நிதி ஒதுக்கி 11 ஆயிரம் புதிய பேருந்துகள் வாங்குவதற்கு அனுமதி வழங்கி 4500 பேருந்துகள் மக்களின் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. 15 ஆண்டுகள் ஓடிய பேருந்துகள் அகற்றப்பட்டு, அந்த இடங்களில் இந்த புதிய பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கிறது.

இதை பேருந்தில் பயணிக்க கூடிய அனைவரும் பார்க்கலாம். மஞ்சள் நிற பேருந்துகள் நகர்ப்புறங்களிலும், நீல நிறப் பேருந்துகள் கிராமப்புறங்களிலும் ஓடிக்கொண்டிருப்பதை மக்கள் பார்க்கலாம். அரசு விரைவு போக்குவரத்து கழகத்திற்கும் உரிய புதிய பேருந்துகள் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் போக்குவரத்து துறை மிகப்பெரிய மாற்றத்தை கண்டுள்ளது

ஓரணியில் தமிழ்நாடு இயக்க பரப்புரையின் மூலம் இதுவரை ஒரு கோடியே 35 லட்சம் பேர் திமுகவில் இணைத்துக் கொண்டுள்ளார்கள். முதலமைச்சருடைய நல்லாட்சிக்கு சான்றாக நாங்கள் போகின்ற இடத்தில் வரவேற்பு அளித்து அவர்களே திமுகவில் இணைத்து கொள்கிற காட்சியை பார்க்க முடிகிறது. எனவே தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் தமிழ்நாடு தலை நிமிர்ந்து நிற்கிறது என்பதை இது காட்டுகிறது.

உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மக்கள் திரண்டு வந்து அவர்களின் கோரிக்கைகளை மனுக்களாக அளித்து வருகின்றனர். 15 துறைகளின் மூலமாக 45 சேவைகள் வழங்குவதற்கு முகாம்கள் மூலம் விண்ணப்பம் பெறப்படுகிறது. வீடு தேடி வரும் அரசு என்று முதலமைச்சர் கூறியது போல மக்களே திரண்டு வந்து மனுக்களை வழங்கி வருகிறார்கள். இந்த முகாம் நடப்பது குறித்து ஒவ்வொரு வீடாகச் சென்று மக்களுக்கு தெரிவித்து அவர்கள் தெரிவித்த கருத்துக்களை இதற்கான செயலியில் உள்ளீடு செய்கின்ற போது அவர் எந்த இடத்தில் இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளும் வகையில் இது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது மிகப்பெரிய வெற்றிகரமான நடவடிக்கையாக அமைந்துள்ளது

தமிழ்நாட்டின் மிகப் பெரிய கட்சி தங்களுடன் கூட்டணி சேருவார்கள் என்ற எடப்பாடி பேச்சு குறித்த கேள்விக்கு தமிழ்நாட்டின் நிலையை அறிந்து தான் பேசுகிறாரா? இல்லையா? என்பது தெரியவில்லை.

தமிழ்நாட்டின் மிகப்பெரிய கட்சி திராவிட முன்னேற்ற கழகம். அதற்கு அடுத்தபடியாக அதிமுக. இந்த இரண்டு கட்சிகளை தாண்டி எந்த கட்சியை பெரிய கட்சி என்று சொல்ல வருகிறார் என தெரியவில்லை.

அ.தி.மு.க.வை விட பெரிய கட்சி இருக்கிறது என்பதை அவர் சொல்ல வருகிறாரா. எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் அதிமுக கட்சியின் தரத்தை தாழ்த்திக் கொள்கிறாரா என்பதுதான் தற்போது சந்தேகமாக உள்ளது.

அவர் பேசுகின்ற போது என்ன பேசுகிறோம் என்பதை அறிந்து பேச வேண்டும். புதிதாக வருகின்ற பெரிய கட்சி என இவரே சொல்கிறார் என்றால் அதிமுகவுடைய சூழலை அவரே குறைத்து மதிப்பிடுகிறார் என்ற சந்தேகம் தான் எழுகிறது என செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

### எஸ்.கே.எஸ்.சிக்கந்தர் பாபு தலைமையில் – திருச்சி குண்டு பிலால் முன்னிலையில்

# சவூதி அரேபியா கிழக்கு மாகாண அயலக அணியின் மாதாந்திர கலந்தாய்வுக் கூட்டம்!

## 100—க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு!

சவூதி, ஜுலை 21-

சவூதி அரேபியா கிழக்கு மாகாண அயலக அணியின் மாதாந்திர கலந்தாய்வு கூட்டம் ஜுலை 4-ஆம் தேதி கோபார் நகரத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியை அயலக அணி கிழக்கு மாகாண அமைப்பாளர் எஸ்.கே.எஸ். சிக்கந்தர் பாபு தலைமையில் கிழக்கு மாகாணதுணை அமைப்பாளர் திருச்சி குண்டு பிலால் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் இளைஞர் அணி அஷ்ரஃப்தீன், மகளிர் அணி திருமதி. பரிதா பானு மற்றும் பொறுப்பாளர்கள் ஆகாமது கபீர், சிவகுமார், ஆனந்தராஜ், ராபர்ட், இம்ரான், வினோத், திருமதி. தௌலத், திருமதி. சபர்மதி, மற்றும் நிஹார், அஜ்மல், சலாவுதீன், சையத் அலி, சுல்தான், அப்துல் பாசித், சவுதி வாசி ரஃபி, ஜின்னா, சிவா, கலீஃபா, அசார், நிசார், ரியாஸ், ஃபஹத், முகமது சேத்தப்பா, பீர் முகமது, சகாயராஜ் சத்யராஜ், சோழராஜன், ராஜேஷ், சதாம், முகமது ரவூஃப், அஹ்மத், மர்ஜுன், ரியாஸ் மற்றும் மாணிக்கம் என 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



சேலம் மாவட்டம் ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் அம்மம்பாளையம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாமை ஆத்தூர் ஒன்றிய பொறுப்பாளர்கள் டாக்டர் வே.செழியன், வரதராஜன் ஆகியோர் தொடங்கி வைத்து, பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து சான்றிதழ் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சந்திரசேகரன், நடராஜ், பூக்கடை ராஜா, துரைசாமி, மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




தி.மு.க. சட்டத்துறையின் சார்பில் மேற்கு மண்டலம் 2 கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் 2026 ஆண்டு நடைபெறுகின்ற சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு விருதுநகர் தெற்கு மற்றும் வடக்கு மாவட்டத்திற்கு உள்ளடங்கிய கழக வழக்கறிஞர்கள் மற்றும் DLC, CLC, FLC, TLC, ULC Div LC ஆகியோர்களுக்கு பயிற்சி பாசறைக் கூட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், தங்கபாண்டியன் கழக சட்டத்துறை இணை செயலாளர்கள் கே.எஸ். இரவிச்சந்திரன், சு. ராதாகிருஷ்ணன், துணை செயலாளர் ராஜா முகமது, வழக்கறிஞர்கள் ஏ.கலாநிதி ,எஸ்.எஸ்.. மனோஜ் மற்றும் வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாவட்ட வழக்கறிஞர் அணியின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். முன்னதாக நிகழ்ச்சி துவங்குவதற்கு முன்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த மகன் மு.க.முத்து அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் பயிற்சி வகுப்பு துவங்குவதற்கு முன்பாக அன்னாரின் மறைவிற்கு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைந்த மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம், குழு தலைவர்/ ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, இணைத் தலைவர்/ திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராசு, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், மொடக்குறிச்சி சி.சரஸ்வதி, மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா, திட்ட இயக்குனர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா, உதவி ஆட்சியர் (பயிற்சி) காஞ்சனா சௌதரி உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்ட வர்த்தக அணி சார்பில் கலைஞர் பிறந்தநாள் விழா!

# பாடாலூர் பெரியார் குடில் மாணவ,மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - சட்டமன்ற உறுப்பினர் எம் பிரபாகரன் பங்கேற்பு!

## ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் தலைமையில் நடைபெற்றது!

பெரம்பலூர்,ஜுலை 21-

பெரம்பலூர் மாவட்ட வர்த்தக அணி சார்பில், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன் தலைமையில், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் வெ.ரமேஷ் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, ஆலத்தூர் மேற்கு ஒன்றியம்,

பாடாலூர் பெரியார் குடில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நலத் திட்ட உதவிகள் மற்றும் மதிய உணவு ஆகியவற்றை

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் கலந்து கொண்டு வழங்கினார்கள். இதில் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், வேப்பந்தட்டை மேற்கு

ஒன்றிய கழகச் செயலாளர் செ.நல்லதம்பி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து. ஆதவன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.அருண், மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர்கள் நாராணயசாமி, அருண், செந்தில், கருப்பன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் இளையராஜாஅமல்ராஜ், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் கோபாலபுரம் செல்வராஜ், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் எம்.ரெங்கராஜ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த மகன் மு.க.முத்து மறைவு!

## மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா இரங்கல்!

சென்னை, ஜுலை 21-

மு.க. முத்து அவர்களின் மறைவுக்கு மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த மகன் மு.க.முத்து அவர்கள் மறைந்தார் என்ற செய்தி அறிந்து துயரமுற்றேன். தந்தையைப் போலத் திரைத் துறையில் தடம் பதித்தவர். அவரை பிரிந்து வாடும் முதலமைச்சர் உள்ளிட்ட உறவினர்களுக்கும் திமுக தொண்டர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கடலூர் மேற்கு மாவட்டம்,அண்ணாகிராம ஒன்றியம் எனதிரிமங்கலம் கிராமத்தில் காவனூர், கரும்பூர், கொறத்தி, எனதிரிமங்கலம் ஆகிய ஊராட்சிகளுக்கு, உங்களுடன் ஸ்டாலின் , திட்ட மனுக்கள் பெரும் முகாம் நடைபெற்றது. தி.மு.க. அண்ணா கிராம ஒன்றிய செயலாளர் – ஆத்மா குழு உறுப்பினர் வி.கே. வெங்கட ராமன் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்று தொடங்கி வைத்தார். பண்ருட்டி வட்டாட்சியர் பிரகாஷ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மோகனாம்பாள், புனிதா, வட்ட வழங்கல் அலுவலர் சிவகுமார், அண்ணா கிராம மேற்கு ஒன்றிய செயலாளர் ராமு (எ) ராமச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் என்.பலராமன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.